மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : அப்படி மாற்று வதிலே பல்வேறு இடர்பாடுகள் இருக்கும் காரணத்தால், சிந்தித்துப் பார்த்து பிரீயூனிவர்சிடி கோர்ஸ் யுனிவர்சிடியோடு இருக்க வேண்டுமென்று வைக்கப்பட்டிருக்கிறது. பல கல்லூரிகள் நிலைத்து நிற்கக் காரணமாக இருப்பதே புகுமுக வகுப்பு அங்கே இருப்பதுதான். இப்போது பள்ளி இறுதி வகுப்பில் இரண்டு லட்சம் மாணவர்கள் தேர்வு எழுதுகிறார்கள். புகுமுக வகுப்பில் தற்போது 75,000 மாணவர்கள் அளவுக்குத்தான் பயிலுகிறார்கள். இதைப் பள்ளிக்கு மாற்றிவிட்டால், இரண்டு லட்சம் பேர் பி.யு.சி. தேர்வு எழுதும் நிலை ஏற்படும். இப்போது இருக்கும் முறையில் ஸ்கூல் ஃபைனல் என்பதற்குப் பிறகு கல்லூரியில் பிரியுனிவர்சிடி கோர்ஸ், யுனிவர்சிடி படிப்புக்கு ஒரு பாலமாக அமைய வேண்டு மென்ற முறையில் அமைந்திருக்கிறது. ஆகவே, இப்போது இருக்கும் முறையை நம்முடைய மாநிலத்தைப் பொறுத்தவரை மாற்றுவதாக இல்லை.

Post of Principal of Ponneri Government College

* 62 Q.—THIRU T. MARTIN : Will the Hon. the Minister for Education and Health be pleased to state—

(*a*) whether the post of Principal of Ponneri Government College, Chingleput District is vacant now; and

(*b*) if so, when the post will be filled up?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) இல்லை.

(இ) இவ்வினாவிற்கு இடமில்லை.

திரு. டி. மார்டின் : சமீப காலத்தில் சில மாதங்களுக்கு முன்பு அந்தக் கல்லூரியில் பிரின்சிபால் இல்லாத நிலை ஏற்பட்டது அரசுக்குத் தெரியுமா ? அதைப் பற்றிக் கேள்வி கேட்ட பிறகு பிரின்சிபாலை நியமித்தார்களா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு உறுப் பினர் அவர்கள் கேள்வி கேட்ட நேரத்தில் அங்கு காலி இடம் இல்லை. கடந்த நவம்பர் முதல் பிப்ரவரி மாதத்திற்கு இடையில் முதல்வர் இடம் காலியாக இருந்தது. திருச்சிராப்பள்ளி அரசினர் கல்லூரி முதல்வர் தேர்ந்தெடுக்கப்பட்ட பிறகு பொன்னேரி கல்லூரி பிரின்சிபால் மாற்றப்பட்டார். அப்படி இரண்டொரு முதல்வர்களை மாற்றுகிறபோது ஆண்டு இடையில் வரமாட்டேன் என்று அவர்கள் மறுத்ததன் காரணமாக மூன்று மாத காலம் கழித்து 3—3—1970-ல் திரு. சீனிவாசன் அவர்கள் முதல்வராக நியமிக்கப்பட்டார்கள். அதுவரையில் முதன்மைப் பேராசிரியர் அவர்கள் முதல்வர் பொறுப்பையும் ஏற்று நடத்தி வந்தார்கள்.

THIRU T. MARTIN : Mr. Speaker, Sir, may I request the Hon. Minister to state who was looking into the affairs of the College during that period of vacancy? Was it like a ship without a captain?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : இடைக்காலத்தில் சினியர் ப்ரொபசர் கூடுதல் பொறுப்பாக முதல்வர் பொறுப்பையும் ஏற்றுக் கொண்டிருந்தார்கள்.

தமிழ்நாடு தேசிய மாணுக்கர் படை

*** 63 வினு—புலவர் பொ. பொன்னம்பலம் :** மாண்புமிகு கல்வி, சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகக் கல்லூரிகள் அனைத்திலும் தமிழகத் தேசிய மாணுக்கர் படை அமைக்கப்பட்டுள்ளதா ?

(இ) ஆமெனில், அப்படைக்கும், முன்பிருந்த தேசிய மாணுக்கர் படைக்கும் பயிற்சி முறையில் உள்ள வேறுபாடுகள் யாவை ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) கல்வி நிறுவனத் தலைவர்களிடமிருந்து கல்வி இயக்குநரின் சிபாரிசுடன் கோரிக்கை பெறப்பட்ட கல்லூரிகளில் தேசிய மாணவர் படை அமைக்கப் படுகின்றன.

(இ) தேசிய மாணவர்கபடை பழைய திட்டத்திற்கும், புதிய திட்டத்திற்கும் உள்ள முக்கிய வேறுபாடுகள் பின்வருமாறு :—

1. பழைய திட்டத்தில் தேசிய மாணவர் படை பயிற்சி மூன்றாண்டுகட்குக் கட்டாயமாக இருந்தது. ஆனல் தற் போதுள்ள திட்டத்தில் ஈராண்டுகட்கு அவரவர் விருப்பப்படி—கட்டாயம் ஏதுமின்றி—அப்பயிற்சி உள்ளது, முதல் இரண்டாம் ஆண்டு பட்டப் படிப்புப்பயிலும் மாணவர்கள் மட்டுமே சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர்.

2. புதிய திட்டத்தின் கிழ் புகுமுக வகுப்பு மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுவதில்லை, முன்பெல்லாம் அவர்கள் பழைய திட்டத்தில் சேர்த்துக் கொள்ளப்பட்டனர்.

3. இறுதியாண்டு பட்டப்படிப்பு மாணவர்கள் தேசிய மாணவர் படையில் தொடர்ந்து இருக்க விருப்பப்பட்டால் அவர்கள் அவ்வாறே இருக்க அனுமதிக்கப்படுகின்றனர், மேலும் அவர்களுக்கெனத் தனிப் பாடத் திட்டம் வகுக்கப்பட்டிருக்கிறது.

புலவர் பொ. பொன்னம்பலம் : தமிழக தேசிய மாணுக்கர் படை அரசினர் கல்லூரிகளிலும், தனியார் துறை கல்லூரிகளிலும் ஒரே நிலையில் அமைக்கப்பட்டிருக்கின்றனவா ? வேறுபாடு இருக்கிறதா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : அரசினர் கல்லூரி கள், தனியார் கல்லூரிகள் எல்லாவற்றிலும் என்.சி.சி-க்கு ஒரே முறைதான் கையாளப்பட்டு வருகிறது.

திரு. ஆர். கருப்பையா : இந்த தேசிய மாணவர் படையில் கல்லூரி மாணவியரும் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனரா? இல்லை யென்றால் இனியாவது சேர்த்துக்கொள்ள உத்தேசம் உண்டா ?